**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 144 of 2020** |
| Deposition of witness | : | **DW-1** |
| Name | : | **துரைசாமி** |
| Father Name | : | **கிருஷ்ணசாமி கவுண்டர்** |
| Age | : | **51** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11.06.2025.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நானும், ஒன்றாம் பிரதிவாதியும், வாதிகளும் விஜயகிரி வேலாயுதசாமி கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர்கள் என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளை தோற்றுவிக்கப்பட்ட சமயத்தில் ஒன்றாம் வாதி பாலகிருஷ்ணன் மேற்படி அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் தலைவர் என்றால் சரிதான். வாதிகள், ஒன்றாம் பிரதிவாதி, மூன்றாம் பிரதிவாதி மற்றும் மொத்தம் 11 பேர் சேர்ந்து கடந்த 10.02.2016 தேதியில் குன்னத்தூர், கூழாங் குளத்தில் 1.04 ஏக்கர் இடம் கிரையும் பெற்றோம் என்றால் சரிதான். 18.02.2016 தேதியில் நானும், வாதிகளும், ஒன்று மற்றும் மூன்றாம் பிரதிவாதிகளும், வேறு பல நபர்களும் சேர்ந்து மேற்படி அறக்கட்டளையை உருவாக்கினோம் என்றால் சரிதான்.

2. மேற்படி அறக்கட்டளை பதிவு செய்த சமயத்தில் ஒன்றாம் வாதியை நிறுவனர் மற்றும் தலைவராகவும், ஒன்றாம் பிரதிவாதியை செயலாளராகவும், என்னை பொருளாளராகவும் காட்டி தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளை ஆரம்பித்த பின்பு நாங்கள் ஏற்கனவே 10.02.2016 தேதியில் கிரையம் பெற்ற மேற்படி இடத்தை அறக்கட்டளைக்கு 50 ஆண்டுகள் குத்தகைக்கு எடுத்துக் கொண்டோம் என்றால் சரிதான்.

3. அறக்கட்டளையின் விதிகளுக்கு உட்பட்டுதான் நாங்கள் செயல்பட வேண்டும் என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளையின் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டால்

DHARANEETHER Digitally signed by B DHARANEETHER Date: 2025.06.11 17:53:50 +0530

அது செல்லாது என்றால் சரிதான். எங்கள் அறக்கட்டளையின் பத்திரத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் என்ன என்ன கடமைகள் என்று வகுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளையின் ஆவணத்தின் படி செயற்குழு உருவாக்கப்பட வேண்டும் என்றால் ஞாபகம் இல்லை, நாங்கள் செயற்குழு எதுவும் உருவாக்கவில்லை. எங்கள் அறக்கட்டளை ஆவணத்தில் கையொப்பம் செய்வதற்கு முன்பாக நான் அதை படித்துப் பார்த்து உள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி அறக்கட்டளை ஆவணத்தில் கண்டுள்ள சரத்துக்கள் படி ஒரு உறுப்பினர் நீக்கப்பட வேண்டும் என்றால் அவர் இறந்திருக்க வேண்டும் அல்லது ராஜினாமா செய்ய வேண்டும் அல்லது நொடிந்த நபராக இருக்க வேண்டும் அல்லது நிர்வாக குழு தீர்மானம் இயற்றி நீக்க வேண்டும் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நிர்வாகக் குழு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை கூட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2016 ல் நிர்வாக குழு உருவாக்கப்படாமல் உள்ளது சம்பந்தமாக மேற்படி அறக்கட்டளையின் தலைவரை நாடியோ அல்லது நீதிமன்றத்தை நாடியோ நிர்வாக குழுவை தோற்றுவிக்க எந்த ஒரு நடவடிக்கையும் என்னால் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

5. ஒவ்வொரு நிதி ஆண்டும் அறக்கட்டளையின் கணக்குகளை, நிர்வாகக்குழு அமைப்பு தணிக்கை செய்ய வேண்டும் என்று அறக்கட்டளை ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். நிர்வாக குழு கூடுவதற்கு 15 நாட்களுக்கு முன்னதாகவே, அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்று ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். சிறப்பு பொதுக்கூட்டம், தலைவர் மற்றும் செயலாளர் முடிவெடுத்தால் தான் நடத்த இயலும் என்றால் சரிதான். அவ்வாறு கூட்டம் நடத்துவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக, அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவல் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும் நிர்வாக குழு கூடுவதற்கு 7 நாட்களுக்கு முன்னதாக அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்றால் சரிதான்.

6. மேற்படி அறக்கட்டளை ஆவணத்தை திருத்த வேண்டும் என்றால் வருமான வரித்துறைக்கு தெரிவித்து, அனுமதி பெற்றுதான் திருத்தம் செய்ய

வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். வாதி தற்போதும் மேற்படி அறக்கட்டளையின் தலைவராக தான் செயல்பட்டு வருகிறார் என்றால் தவறு, வாதி கடந்த 10.01.2019 தேதியில் 1.04 ஏக்கர் பூமி சம்பந்தமாக விடுதலை கொடுத்து விட்டார். 24.05.2019 அவர் நோட்டரி பப்ளிக் முன்னதாக உறுப்பினர் பதவியில் இருந்தும் தலைவர் பதவியில் இருந்தும் விலகி கொள்வதாக எழுதிக் கொடுத்துள்ளார்.

7. பள்ளி நிர்வாகம் சம்பந்தமாக, வாதிகளுக்கும் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகளுக்கும் கருத்து வேறுபாடு இருந்து வந்தது என்றால் இல்லை, வாதி தான் எங்களை அறக்கட்டளையிலிருந்து வெளியேறுமாறு 04.04.2017ல் ஆவணம் செய்து கொடுத்தார். அதன் பின்பு எங்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டது என்றால் இல்லை, அப்போது இருந்து பணத்தை திருப்பி கொடுப்பதற்கு ஆறு மாதம் அவகாசம் கேட்டார் ஆனால் பணத்தை திருப்பி கொடுத்து இயலாத காரணத்தினால் மீண்டும் மூன்று மாதம் அவகாசம் கேட்டார். ஆனால் அவரால் பணத்தை திருப்பிக் கொடுக்க இயலாத காரணத்தினால் தான் 10.01.2019ல் விடுதலை பத்திரம் தொடுத்தார். நாங்கள் தான் ஒன்றாம் வாதியை பணத்தை கொடுக்கவில்லை என்றால் அறக்கட்டளையிலிருந்து விலகுமாறு வற்புறுத்தினோம் என்றால் சரியல்ல. இந்த தாவாவின் வழக்குரையில் உள்ள விவரங்களை நான் படித்துப் பார்த்து தெரிந்து கொண்டுள்ளேன் என்றால் சரிதான்.

8. கடந்த 26.07.2018 தேதியில் ஒன்றாம் வாதியை, இரண்டாம் பிரதிவாதி பரணி டீ ஸ்டால் வரச் சொல்லி கூறியிருந்தார் என்றால் அது உண்மை இல்லை. அவர் வர சொன்ன சமயத்தில் பரணி டீ ஸ்டாலில் நானும், இரண்டாம் பிரதிவாதியும் உடன் சில நபர்களும் உடன் இருந்தனர் என்றால் சரியல்ல. அன்றைய தினம் நானும் இரண்டாம் பிரதிவாதியும் மற்ற நபர்களும் ஒன்றாம் வாதியை அறக்கட்டளையிலிருந்து விலகுமாறு மிரட்டினோம் என்றாலும் அதனால் ஒன்றாம் வாதி அங்கிருந்து பயந்து சென்று விட்டார் என்றாலும் சரியல்ல. மேற்படி சம்பவம் சம்பந்தமாக குன்னத்தூர் காவல் நிலையத்தில் 27.07.2018 தேதியில் ஒன்றாம் வாதி புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பொய் புகார். மேற்படி புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்ய பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை

தாக்கல் செய்யப்பட்டு, STC No. 6/2019 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, நாங்கள் குற்றவாளி என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் தவறு.

9. தற்போது என்னிடம் காட்டப்படும் STC No. 6/2019 வழக்கு தீர்ப்புரையில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பில் என்னை குற்றவாளி என்று முடிவு செய்து மீண்டும் இதே போன்ற குற்றங்களில் ஈடுபடக்கூடாது என்று தண்டித்து தான் அனுப்பப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த தீர்ப்பு நகல் தற்போது என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரிதான். **(மேற்படி தீர்ப்பு நகல் E.filing செய்யப்பட்டு வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கில் ஒன்றாம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் ஏற்றுக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சங்கதிகள் என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரிதான்.

10. ஆரம்பத்தில் ஒன்றாம் வாதி இலாபத் தொகைகளை கொடுத்து விடுவதாகவும், எங்களை விலகிக் கொள்ளுமாறும் கூறினார் என்றால் சரிதான். ஆனால் குறிப்பிட்டுள்ள நேரத்தில் சொன்ன தொகையை அவரால் கொடுக்க இயலவில்லை என்றால் சரிதான். சொன்னவாறு அவர் நடந்து கொள்ளாத காரணத்தினால் நாங்கள் தான் அவர்களை அறக்கட்டளையிலிருந்து விலகிக் கொள்ளுமாறு கூறினோம் என்றால் சரியல்ல அவரே தான் விலகிக் கொண்டார். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றாம் ஆவணத்தில் ஒன்றாம் பிரதிவாதி செல்வரதியின் பேரில்தான் முத்திரைத்தாள் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நான் நான்காவதாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் அதில் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள சங்கதிகள் சரி என்றால் சரிதான்.

11. அந்த ஆவணத்தின் படி வாதிகள் மற்ற உறுப்பினர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே 17 லட்சத்தி 56 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று பேசப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்தத் தொகையை 30.04.2017 தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று காலம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் ஆறாம் பக்கத்தில் உள்ள இரண்டாம் பத்தியில் '25.04.2017 தேதிக்குள்' என்று கண்டுள்ளது என்றால்

சரிதான். குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்படி தொகையை செலுத்தவில்லை என்றால் மற்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து வாதிகளுக்கு மொத்தம் ரூபாய் 5 லட்சத்து 20 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்று அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு தரப்பிலும் தொகை செலுத்த தவறினால் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் கண்டுள்ளது என்றால் கண்டுள்ளது. அதில் ட்ரஸ்டின் மினிட் புட் ஒன்றாம் இலக்கமிட்ட நபரின் வசம் உள்ளது என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

12. ஒரு ஒப்பந்தத்தை கால நீட்டிட்டு செய்ய வேண்டும் என்றால் அந்த ஒப்பந்தத்தின் தரப்பினார்கள் அனைவரும் கையொப்பம் செய்தால் தான் செய்ய இயலும் என்றால் சரிதான். ஆனால் அவரே வந்து மூன்று மாதம் கோரி எழுதிக் கொடுத்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் மேற்படி ஆவணத்தின் பின்பற்றத்தில் வாதியை தவிர வேறு உறுப்பினர்கள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் அதன் அடிப்படையில் நான் ஒன்றாம் வாதியிடம் எதையும் கோர இயலாது என்றால் சரியல்ல. எங்கள் எதிர் வழக்குரையில் 21.10.2016 தேதியில் ஒன்றாம் வாதியும் மற்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஒப்பந்தம் செய்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான்.

13. மேற்படி எதிர் வழக்குரையில் கூறப்பட்டுள்ள 21.10.2016 தேதியிட்ட ஆவணத்தை இதுவரையில் நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் வாதிகள் ஒரு கோடியே 3 லட்சத்து 11 ஆயிரத்து 920 ரூபாய் 31.03.2017 தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். அந்த விவரத்தை 04.04.2017 தேதியில் எழுதப்பட்ட ஒப்பந்தத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த ஆறு மாதத்திற்கு வட்டி சேர்த்து தான் ரூபாய் ஒரு கோடியே 17 லட்சம் என்று 04.04.2017 தேதியிட்ட ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது.

14. 18.02.2016 தேதியிட்ட அறக்கட்டளை ஆவணத்தின் படி எந்த ஒரு உறுப்பினரும் இலாப நோக்கத்துடன் செயல்படக் கூடாது என்று உள்ளது என்றால் சரிதான். 10.01.2019 தேதியிட்ட ஆவணமானது குன்னத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மாலை 04.35 மணிக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திற்கு

சாட்சிகளாக டி.கே மகேஸ்வரன் மற்றும் ராஜேந்திரன் உள்ளனர் என்றால் சரிதான். 04.04.2017 தேதியிட்ட ஆவணத்திலும் அதே நபர்கள் தான் சாட்சியாக உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி 10.01.2019 தேதியிட்ட ஆவணமானது எங்களது செல்வாக்கைக் கொண்டு வாதிகளை மிரட்டி பெறப்பட்டு ஆவணம் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல .

15. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி டிரஸ்டுக்கு சேர்மனாக உள்ளேன் என்று கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். 10.01.2019 தேதியிட்ட ஆவணமானது நாங்கள் முன்னதாக கிரயம் வாங்கிய சொத்தை பொறுத்தவரையில் வாதிகள் விடுதலை கொடுப்பது சம்பந்தமாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நானே ஏற்கனவே நான் வைத்துள்ள வாதியின் ஆதார் கார்டு கொண்டு தாக்கல் செய்து வாதி தாக்கல் செய்துள்ளது போல் காட்டி உள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி டிரஸ்டின் துணை பத்திரத்தை 24.05.2019 தேதியில் பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான்.

16. அந்த துணை பத்திரத்துடன் இணைத்து 06.02.2019 தேதியிட்ட தீர்மானத்தையும் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த தீர்மானத்தில் வெங்கடேசன் பட்டதாரி ஆசிரியர் என்று எதற்காக கையொப்பம் செய்துள்ளார் என்றால் உண்மை நகல் என்பதை காட்ட கையொப்பம் செய்துள்ளார். அந்த ஆவணத்தில் ஒன்றாம் வாதி பாலகிருஷ்ணனை 27.06.2018 நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பாலகிருஷ்ணன் நீக்கப்பட்ட தேதியை எதிர் வழக்குரையில் எனது தரப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 27.06.2018 நடைபெற்ற கூட்டத்தின் தீர்மானத்தை இதுவரையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 06.02.2019 தேதியிட்ட தீர்மானத்தை 24.05.2019 வரை பதிவு செய்யாமல் இருந்ததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் இல்லை.

17. 10.01.2019 தேதியில் உறுப்பினர் கீர்த்தி மற்றும் லோகநாதன் யாரிடம் ராஜினாமா கடிதம் கொடுத்தார்கள் என்றால் தலைவர் மற்றும்

செயலாளரிடம் கொடுத்தார்கள். தலைவர் யார் என்றால் நான் தான். 05.02.2019 தேதியில் உறுப்பினர் வைரமணி யாரிடம் ராஜினாமா கடிதம் கொடுத்தார் என்றால் நோட்டரி பப்ளிக் முன்பாக என்னையும், செயலாளரையும் வைத்து கொடுத்தார். ட்ரஸ்டின் துணைப் பத்திரத்தில் ஒன்றாம் வாதி கொடுத்ததாக சொல்லப்படும் விலகு பத்திரம் கணபதி பாளையத்தில் வைத்து கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் அது தவறு. அவ்வாறு எனில் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றால் நோட்டரி வழக்கறிஞர் முன்னதாக குன்னத்தூரில் வைத்து கொடுக்கப்பட்டது. நோட்டரி வழக்கறிஞர் சீல் வைத்து கையொப்பம் செய்ததில் தேதி குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. ஏற்கனவே கீர்த்தி மற்றும் பாலகிருஷ்ணனிடம் கையொப்பம் மட்டும் பெற்று வைத்த தாளில் நாங்கள் நிரப்பி நோட்டரி பப்ளிக் கையெழுத்து மற்றும் சீல் பெற்றுக் கொண்டோம் என்றால் சரியல்ல. ஒன்றாம் வாதியின் ராஜினாமா பத்திரத்தில் உள்ள சங்கதிகள் நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றால் சரிதான்.

18. அந்த ராஜினாமா கடிதத்திலும் பாலகிருஷ்ணன் தலைவர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 06.02.2019 தேதியில் நடத்தப்பட்ட கூட்டத்திற்கு முன்னதாக அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் தகவல் சொல்லப்பட்டது. போன் மூலம் தகவல் சொல்லப்பட்டது. அவ்வாறு ஒரு விதியே எங்கள் அறக்கட்டளை ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். நாங்கள் எல்லாம் பேசி முடிவு செய்து கொண்டோம். அவ்வாறு விதிகளுக்கு அப்பாற்பட்டு நாங்கள் செய்வதற்கு ஏதேனும் தீர்மானம் இயற்றப்பட்டதா என்றால் இல்லை. எந்த ஒரு தீர்மானம் நிறைவேற்றும் போது எத்தனை உறுப்பினர்கள் வந்தனர் எத்தனை உறுப்பினர்கள் வரவில்லை என்று குறிப்பு இட வேண்டும் என்றால் சரிதான். ஆனால் 06.02.2019 தேதியிட்ட தீர்மானத்தில் அவ்வாறு குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். தனியாக புத்தகத்தில் உள்ளது அதை வேண்டுமென்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அதை இதுவரையில் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை.

19. மேற்படி 26.07.2018 முதல் 06.02.2019 கூட்டம் வரை தற்காலிக தலைவராக ரங்கசாமி தான் இருந்தார் என்று 06.02.2019 தேதியிட்ட

தீர்மானத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 06.02.2019 தீர்மானத்தை இயற்ற போதிய உறுப்பினர்கள் அன்று இருந்தனர் என்று அதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அதில் குறிப்பிடவில்லை ஆனால் போதிய உறுப்பினர்கள் இருந்தார்கள். கூட்டத்திற்கு வருகை பதிவேடு பராமரித்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் நாங்கள் மூவரும் அந்த தீர்மானத்தை எழுதிக் கொண்டு பின்னிட்டு ஒவ்வொரு உறுப்பினரிடமும் தனிப்பட்ட முறையில் கையொப்பம் பெற்றுக் கொண்டோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் அந்த தினத்தில் பொதுக்கூட்டம் நடத்தப்படவில்லை என்றாலும், சொன்ன விதத்தில் தீர்மானம் எதுவும் இயற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. அந்த தீர்மானத்தில் செயற்குழு கூட்டம் என்று தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தனியாக பொது குழு கூட்டம் நடத்தப்படவில்லை என்றால் எங்களை பொறுத்தவரையில் இரண்டுமே ஒன்றுதான். இரண்டும் ஒன்று என்று இதற்கு முன்பு எந்த ஒரு தீர்மானமும் அல்லது அறக்கட்டளை ஆவணத்திலோ இல்லை என்றால் சரிதான்.

20. 04.04.2017 தேதியில் அறக்கட்டளையின் மினிட் புத்தகம் ஒன்றாம் வாதியிடம் இருப்பதாக கூறும் நிலையில் 06.02.2019 தேதியில் கூட்டம் போட்டு மினிட் புத்தகத்தில் பதிவு செய்ய இயலாது என்றால் சரியல்ல. 06.02.2019 தேதியன்று நடைபெற்ற நிர்வாக கூட்டத்தைப் பற்றி எனது எதிர் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். அந்தத் தேதியில் அவ்வாறு கூட்டம் நடைபெறாத காரணத்தினால் தான் அந்த விவரத்தை எனது எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிர் வழக்குரை 06.06.2019 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

21. 04.04.2017 ஒப்பந்தம் படி வாதி அந்தத் தொகையை கொடுக்க இயலாத காரணத்தினால் அவரது நிர்வாகத்தில் நாங்கள் அடிக்கடி இடையூறு செய்து வந்தோம் என்றால் சரியல்ல. அவர் கொடுக்க வேண்டிய 24,24,600/- என்பது இலாபத்தொகை. 10.01.2019 தேதிய விடுதலை ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. அறக்கட்டளையின் துணை ஆவணம் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதை தெரிந்து கொண்டு அவசர கதியில் மேற்படி துணையாவணம் இயற்றப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 21.10.2016 தேதியிட்ட ஒப்பந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் தான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

22. எனது தரப்பு மூன்றாவது மற்றும் நாலாவது ஆவணம் இந்த வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை பெறும் போது தீர்மானத்தை கொடுத்து தான் பெற்றிருப்போம் என்றால் சரிதான். எனது தரப்பு நான்காவது ஆவணத்தில் பன்னிரண்டாவது பத்தியில் பள்ளி, தனிநபர் லாபத்திற்கோ குழுக்கள் லாபத்திற்கோ அல்லது கூட்டு நபரின் லாபத்திற்கோ செயல்படக்கூடாது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் விதிமுறைகளுக்கு மாறாக செயல்பட்டதை ஒன்றாம் வாதி கேட்டதின் காரணத்தினால் தான் நாங்கள் பிரச்சினை செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் தொடர்ந்து பிரச்சனை செய்து வந்த காரணத்தினால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்து நாங்கள் அவரது நிர்வாகத்தில் இடையூறு செய்யக்கூடாது என்று கேட்டுள்ளார் என்றால் சரியல்ல. அதனால் வாதிகள் அவர் கோரும் பரிகாரம் பெற தகுதியானவர்கள் என்றால் சரியல்ல. நான் பொய்யான ஆவணங்கள் செய்துளத்துளத்துளத்துளத்துளத்துளத்துளத்து பொய்யான சங்கதிகளுடன் எதிர் வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.